“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 10

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. ஈழத்தில் காமன்கூத்து பெரும்பாலும் ஆடப்பெறும் பகுதி
   1. மன்னார்
   2. மட்டக்களப்பு
   3. மலைநாடு

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் பெற்று வந்துள்ள சொல்
   1. வண்ணம்
   2. வாழ்த்து
   3. மணம்

3. உயிர்மெய் நெடில் எழுத்துகளின் எண்ணிக்கை
   1. தொண்ணூறு
   2. நூற்றிருபத்தாறு
   3. இருநூற்றுநாற்பத்தேழு

4. வரை, கோடு, சிலம்பு என்னும் பல சொற்களைக் குறிக்கும் ஒருசொல்
   1. முகில்
   2. மலை
   3. நிலா

5. நீ காலையும் மாலையும் வணங்கு. இதில் தொக்கி நிற்கும் வாக்கிய உறுப்பு
   1. எழுவாய்
   2. பயனிலை
   3. செயப்படுபொருள்

6. வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கென தமிழில் நாணயங்களை வெளியிட்ட ஐரோப்பியர்
   1. பிரித்தானியர்
   2. ஒல்லாந்தர்
   3. போர்த்துக்கீசர்

7. கணினி வகுப்பிலுள்ள கணினிகளுள் சில பழுதடைந்துவிட்டது. இதில் வந்துள்ள வழு
   1. காலவழு
   2. எண்வழு
   3. மரபுவழு

8. எமது புதிய வீட்டிற்குத் தேவையான தளபாடங்கள் வாங்கினோம். இதில் தளபாடம்
   1. மலையாளச்சொல்
   2. வடசொல்
   3. கன்னடச்சொல்

9. பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்த வாக்கியம்
   1. எனது தாய்மொழி தமிழ்.
   2. நீ எங்கு வந்தாய்.
   3. பறவைகள் உயரப் பறந்தன.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

1 2 3

10. நெல், தினை, வரகு முதலியவற்றின் உள்ளீடு அரிசி போல அவரை, உழுந்து, பயறு என்பவற்றின் உள்ளீடு
 1. மணி
 2. பருப்பு
 3. முத்து

11. ‘நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல...’ இதில் கயம் என்பது
 1. வயல்
 2. காடு
 3. குளம்

12. ஈழத்தில் தமிழ்மொழி நாளாகக் கொண்டாடப்பெற்று சிறப்பிக்கப்பெறும் நாள்
 1. விபுலாநந்தர் பிறந்தநாள்
 2. விவேகானந்தர் பிறந்தநாள்
 3. விபுலாநந்தர் இறந்தநாள்

13. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பவை
 1. ஐந்திலக்கணம்
 2. ஐம்பால்
 3. ஐம்பொறி

14. பிள்ளைகளின் குற்றங்குறைகளைக் கண்டறிந்து அறிவுரை கூறுதல் ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இதில் குற்றங்குறை என்பது
 1. அடுக்குமொழி
 2. இணைமொழி
 3. இரட்டைமொழி

15. எழுபத்தைந்தாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்பெறும் விழா
 1. வைரவிழா
 2. பவளவிழா
 3. பொன்விழா

16. ‘அகன் அமர்ந்து செய்யாள் உறையும்...’ இத்தொடரில் கடைப்போலி பெற்றுவந்துள்ள சொல்
 1. செய்யாள்
 2. உறையும்
 3. அகன்

17. பண்டைத்தமிழர் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தனர். இயற்கை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
 1. சிறுமை
 2. மறுமை
 3. செயற்கை

18. ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு. இதில் வந்துள்ள உரிச்சொல்
 1. ஓடு
 2. உறு
 3. ஓட

19. செங்காந்தள் நிகர் விரலுடையாள். இதில் வந்துள்ள அணி
 1. உவமை
 2. உருவகம்
 3. தற்குறிப்பேற்றம்

1 2 3

20. கல்வியறிவு இல்லாதோரை இவ்வுலகம் மதிப்பதில்லை. மதிப்பு என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. நன்மதிப்பு
    2. அவமதிப்பு
    3. சுயமதிப்பு

21. 'அறஞ் செய விரும்பு' என்பது ஔவையார் வாக்கு. அறம் என்பது
    1. தருமம்
    2. புறம்
    3. கர்மம்

22. பிரித்தானியரிடமிருந்து ஈழம் விடுதலை பெற்ற ஆண்டு
    1. 1948
    2. 1505
    3. 2000

23. ஆற்றுப்படை நூல்கள் அடங்கியுள்ள சங்க இலக்கியம்
    1. எட்டுத்தொகை
    2. பத்துப்பாட்டு
    3. பெருங்காப்பியம்

24. ஈழநாட்டின் அழகை 'மஞ்சளாவிய மாடங்கள் தோறும்...' என்ற பாடல் மூலம் வெளிப்படுத்திய புலவர்
    1. சின்னத்தம்பிப்புலவர்
    2. காசி ஆனந்தன்
    3. புதுவை இரத்தினதுரை

25. முயற்சி உயர்ச்சி தரும் என்பதை உணர்த்தும் பழமொழி
    1. ஆனைக்கும் அடி சறுக்கும்
    2. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
    3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

(25×1=25 புள்ளிகள்)

**2. சேர்த்தெழுதுக.**

1. பொன் + குடம் = ______________________
2. செம்மை + தாமரை = ______________________
3. வீரம் + கல் = ______________________
4. வடக்கு + கிழக்கு = ______________________
5. ஆழி + பேரலை = ______________________
6. மக்கள் + ஆட்சி = ______________________

(6×1=6 புள்ளிகள்)

**3. பிரித்தெழுதுக.**

1. தொழிற்கல்வி = ____________ + ____________
2. இடப்பெயர்வு = ____________ + ____________
3. செய்ந்நன்றி = ____________ + ____________
4. ஊடகத்தமிழ் = ____________ + ____________
5. நாற்குணம் = ____________ + ____________
6. தண்ணீர் = ____________ + ____________

(6×1=6 புள்ளிகள்)

**4. இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தினூடாக இல்லறத்தார்க்கு திருவள்ளுவர் எவற்றை எடுத்துக்கூறுகிறார்?**

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

(2 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழிலுள்ள இலக்கியவகைச் சொற்களை எடுத்துக்காட்டுடன் தருக. (1 புள்ளி)

____________________________________________

____________________________________________

2. ஐவகை நிலங்களும் எவை? (1 புள்ளி)

____________________________________________

3. பேச்சுமொழி, எழுத்துமொழி இரண்டினையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக. (1 புள்ளி)

4. ஊடகங்கள் ஏன் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்? (1 புள்ளி)

5. வேற்றுமை என்றால் என்ன? ஐந்தாம் வேற்றுமை உருபுகளையும் பொருள்களையும் தருக. (2 புள்ளிகள்)

6. ‘யாதும் ஊரே யாவருங் கேளிர்’ இவ் அடியிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? (1 புள்ளி)

7. ஆகுபெயர் என்றால் என்ன? காலவாகுபெயர், குணவாகுபெயர் என்பவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக. (2 புள்ளிகள்)

8. ஈழத்துமரபான மொழி, மதம், பண்பாடு என்பன அழியாதிருக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள் யாவர்? (1 புள்ளி)

______________________________

______________________________

**6. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நந்த வனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒருதோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

உள்ளாக நால்வகைக் கோட்டை - பகை
ஓடப்பிடித்திட்டால் ஆளலாம் நாட்டை
கள்ளப் புலனென்னும் காட்டை - வெட்டிக்
கனலிட் டெரித்திட்டால் காணலாம் வீட்டை.

1. இப்பாடலைப் பாடிய சித்தர் யார்? (1 புள்ளி)

______________________________

2. ஆண்டி எத்தனை மாதமாய் குயவனை வேண்டி நின்றான்? (1 புள்ளி)

______________________________

3. கள்ளப்புலன் எனக் குறிப்பிடப்பெறுபவை எவை? (1 புள்ளி)

______________________________

4. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக. (1 புள்ளி)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

5. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. அடுக்குத்தொடர் ______________

ஆ. மோனை அணி ______________

இ. வினைமுற்று ______________

ஈ. வினையெச்சம் ______________

(4×½=2 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. வாசம் தரும் என் தேசம்...
2. மெல்ல வரும் தென்றலே...

(3 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. விபுலாநந்தர்
2. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அழிவுகள்
3. தமிழரும் நடுகல்வழிபாடும்

(7 புள்ளிகள்)

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

திருமாலின் திருவவதாரமான இராமபிரானின் வரலாற்றைச் சுவைமிகுந்த சமயக்காப்பியமாகத் தந்தவர் கல்வியிற் பெரிய கம்பராவார். வடமொழி இதிகாசமான வால்மீகி இராமாயணத்தைப் பின்பற்றித் தமிழ்மொழியில் கம்பர் படைத்தளித்த "இராமாவதாரம்" பின்னர் கம்பராமாயணம் என வழங்குவதாயிற்று. பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியாகாண்டம், கிட்கிந்தைகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் ஆகிய ஆறுகாண்டங்களையும், 118 படலங்களையும் பத்தாயிரத்துநானூறு விருத்தப்பாக்களையும் கொண்டமைந்த இந்நூல் கற்பனை விரிவும், கலைநயமும், கவினுறுத்துவ சொல்லாட்சியும் அணிகளின் சிறப்பும் கதாபாத்திர ஒழுங்கமைப்பும் பழைமையுடன் புதுமையைச் சேர்க்கும் உத்தியும் ஒருங்கிணைந்து கம்பரின் கவிதா மேன்மையைக் காட்டி நிற்கின்றது. ஆதிகாவியமாகிய வால்மீகியின் இராமாயணத்தில் சொல்லப்படாத மிதிலைக்காட்சி, வரைக்காட்சி, பொழில் நுகர்ச்சி, இரணியன் கொலை, சீதையை நிலத்தொடு பெயர்த்தமை போன்ற பல செய்திகள் கம்பரது படைப்பில் புதியனவாகக் காணப்படுகின்றன. தமிழர் நாகரிகப்பெருமை, இலக்கியச்சுவை, அழகியலுணர்ச்சி, பெருங்காப்பியப்பண்பு ஆகியன நிரம்பிய முத்தமிழ் இலக்கியமாக கம்பராமாயணத்தை நோக்க முடிகின்றது. உலகியல் வாழ்வினைத் திறம்பட எடுத்துக் காட்டுகின்ற கம்பரது காவியத்தில் மக்கட் பண்பின் மகத்துவம், கற்பின்திறம், குருபக்தி, பெற்றோர்வழிபாடு, அறக்கோட்பாடு போன்றன செந்நெறி பரந்தும் விரிந்தும் பயனுற அமைந்துள்ளன. அத்தகைய சிறப்புற்ற காவியத்தை தமிழின் அமிழ்தம் சொட்டச்சொட்டத் தந்தளித்த கம்பர் சோழநாட்டில் திருவழுந்தூரில் பிறந்தார். சோழமன்னன் குலோத்துங்கனால் ஆதரிக்கப்பெற்றவர்.

1. கம்பராமாயணத்தை எழுதியவர் யார்? (1 புள்ளி)

_______________________________________________

2. இக்காப்பியத்தின் மூலநூல் எது? (1 புள்ளி)

_______________________________________________

3. கம்பராமாயணம் எனப் பெயர்பெறக் காரணம் என்ன? (1 புள்ளி)

_______________________________________________

4. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? (1 புள்ளி)

_______________________________________________

5. மூலநூலில் காணப்படாது கம்பராமாயணத்தில் புதியனவாகக் காணப்பெற்ற விடயங்கள் எவை? (1 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

6. கம்பராமாயணத்தில் செந்நெறி சிறப்புற அமைந்துள்ளது என்பதனை விளக்கி நிற்கும் கருத்துக்கள் எவை? (2 புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.

(4 புள்ளிகள்)

**Deutsch**

Unsere Muttersprache ist tamilisch, wir müssen diese fehlerfrei schreiben und sprechen lernen und versuchen dadurch unser Wissen auszubreiten. Wir, die tamilischen Kinder, die in der Schweiz aufwachsen, erlernen mehrere Sprachen. Wir sind stolz darauf, dass unsere tamilische Sprache, grammatikalisch und literarisch antik ist. Es ist unsere grosse Pflicht unsere hervorragende, tamilische Sprache unserer nächsten Generation weiterzugeben. Um dies zu erreichen, ist es wichtig, dass auch wir die, gemäss den Wegweisungen von tamilischen Gelehrten, mit Hingabe agierende Tamil Education Service Switzerland beistehen.

**Français**

Notre langue maternelle est le tamoul. Chacun devrait faire l'effort d'apprendre à l'écrire et à le parler sans faute afin de favoriser son développement cognitif. Nous, jeunes tamils qui vivons en Suisse, nous apprenons plusieurs langues. Nous sommes fiers de notre langue qui est grammaticalement et littérairement plus antique que d'autres langues. Nous avons la grande responsabilité de transmettre aux futures générations la langue tamoule tant spéciale. Pour cette raison, avec le soutien des maîtres littéraires tamouls, nous devrions soutenir avec dévouement le service de l'éducation tamoule qui œuvre dans ce sens.

**Italiano**

La nostra lingua madre è il tamil. Dovremmo cercare di impararla a scrivere, parlare correttamente ed oltretutto ad arricchire le nostre conoscenze assieme all'apprendimento della lingua. Noi ragazzi tamil viventi in Svizzera, impariamo numerose lingue. Rispetto alle altre lingue, dovremmo riconoscere il tamil come lingua primitiva sia a livello grammatico che letterario. Noi abbiamo la grande responsabilità di dover trasmettere alle prossime generazioni l'importanza e il contenuto della nostra lingua madre tamil, perciò seguendo le orme degli studiosi tamil, dovremmo contribuire al lavoro svolto dall'organizzazione per l'educazione tamil (Tamil Kalvichevai).

**3. கீழ்க்காணும் பந்தியைப் படித்து அதனை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

நாம் இலக்கியங்களை நன்கு ஆராய்ந்தால், அவை பண்பாட்டுத்துறைகளை நன்கு விளக்குகின்றன. தொல்காப்பியர் கருப்பொருளில் பண்பாட்டுத்துறைகள் சிலவற்றைக் கூறுகின்றார். அவற்றுள் வழிபாடும், இசையும், இசைக்கருவிகளும் சில. தமிழர் பண்பாடு காலவோட்டத்தில் மாற்றங்கள் அடைந்துள்ளதா என நோக்குமிடத்து அது மாற்றம் அத்துணை அடைந்ததில்லை. ஆனால் வளர்ச்சியடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர், ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிறசமயங்களைப் போதித்த பார்ப்பனரும் சமணரும் புத்தரும் ஐரோப்பியக் கிறிஸ்தவரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்துசமயத்திலுள்ள வழிபாட்டுமுறையும் இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களினால் வளம்பெற்றன. சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன. சுநீதிகுமார் சட்டர்ஜி, இந்திய பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு திராவிடப்பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தையும், சீத்தலைச்சாத்தனார் இயற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணியையும், உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணத்தையும் ஆராயும்போது இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுள்ளார்கள் என்பது நன்கு புலனாகின்றது.

(4 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |